# பெரியாழ்வார் வைபவம்

ஜ்யேஷ்டே ஸ்வாதீபவம் விஷ்ணு ரதாம்ஶம் தந்விநः புரே |
ப்ரபத்யே ஶ்வஶுரம் விஷ்ணோர் விஷ்ணுசித்தம் புரஶ்ஶிகம் ||


ஸ்ரீகருடாம்ஶரான பெரியாழ்வார் ஸ்ரீவில்லிபுத்தூரில் கலியுகத்தில்சஎ-ஆவதான க்ரோதநவருஷத்தில் ஆனி மாஸத்தில் ஶுக்ல ஏகாதஶீ பானுவாரம் கூடின ஸ்வாதீ நக்ஷத்ரத்தில் [1]ஸப்தபூருஷ ஶுத்தரான ஒரு [2]புரஶ்சூட ஸ்ரீவைஷ்ணவருக்குப் புத்ரராய் யவதரித்து ஸ்வவேதமான யஜுர்வேதாதியாக வேதவேதாங்கங்களை அதிகரித்து ஶாஸ்த்ராப்யாஸங்களாலும் அறிந்து செய்யவேண்டிய கைங்கர்யத்தை, "ஸ்வயமாகத விஜ்ஞாநா:" என்கிறபடியே [3]ஆஜாநமாய் அறிந்தவராய் அந்தக் கைங்கர்யமும் வடபெருங்கோயிலானுக்கே செய்யவேண்டியதாய்த் திருத்துழாய்ப் புஷ்பங்களைத் திருமாலை சேர்த்து வடபெருங்கோயிலானுக்கே ஸமர்பித்துக் கொண்டிருக்க, அப்போது மதுராபதியான வல்லபதேவன் ஒரு தார்மிகனாலே,

> "வர்ஷார்த்த மஷ்டௌ ப்ரயதேத மாஸாந்
> ராத்ர்யர்த்த மர்த்தம் திவஸம் யதேத |
> வார்த்தக்யஹேதோர் வயஸா நவேந
> பரத்ர ஹேதோ ரிஹ ஜந்மநா ச || "

என்கிற ஶ்லோகத்தாலே போதிக்கப்பட்டவனாய்த் தனக்குப் புரோஹிதரான செல்வநம்பியைப்பார்த்து "பரம புருஷார்த்தம் என்?" என்று கேட்க, புரோஹிதரும் 'வித்வான்களைக் கூட்டிப் பரதத்வ நிர்ணயம் பண்ணிவைத்தால் பரமபுருஷார்த்தம் தெரியும்' என்று அருளிச்செய்ய, ராஜாவும் அப்படியே ஸம்மதித்து, ஒரு [4]வித்யா ஶுல்கத்தைக் கட்டிவைத்து வித்வான்களையழைப்பிக்க, அப்போது சில ஸ்ரீவைஷ்ணவர்கள் "ராஜஸமஸ்தாநமாகையாலே [5]பகவத் பாரம்யத்திற்கு என்ன தீங்கு வருகிறதோ?" என்று உள்நடுங்கி நிற்க, அதைக்கண்டு வடபெருங்கோயிலுடையானும் "பரதத்வத்தை

---

1. ஏழுதலைமுறை சுத்தராகிய, 2. முன்குடுமி 3. இயற்கையாகவே 4, ஞானப்பரிசு 5. ஸ்ரீமந் நாராயணனே உயர்ந்த தெய்வம் என்ற நிலைக்கு



அவதாரஸ்தலமான ஸ்ரீவில்லிபுத்தூரில் ஸேவைதரும்
பெரியாழ்வார்
பட்டநாதன், பட்டர்பிரான், விஷ்ணுசித்தர், ஸ்ரீவில்லிபுத்தூரார்,
ஸ்ரீரங்கநாதஸ்வசுரர் என்று போற்றப்படுபவர்

ப்ரகாஶிப்பித்துக் கிழியை அறுத்துவாரும்" என்று பெரியாழ்வாருக்கு ஸ்வப்நங்காட்டியருள, பெரியாழ்வாரும் அப்படியே ஸ்ரீமதுரையிலெழுந்தருள, செல்வநம்பியும் தனக்கு ஸ்வப்நம் காட்டியபடியைக்கண்டு ராஜாவும் வித்வான்களையு மழைத்துக்கொண்டு ஆழ்வாரை யெதிர்கொண்டுபோய் எழுந்தருளப்பண்ணிக்கொண்டுவர, வித்வான்களும் "இவர் என்ன செய்யப் போகிறார்?" என்று [1]சித்ராந்வேஷிகளாயிருக்க, இவ்வாழ்வாரும் புருஷஸூக்தத்தில் பூர்வோத்தராநுவாகங்களை [2]உபபாதித்துத் ததநுகுணமாக ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களைக்கொண்டு "ஸ்ரீமந்நாராயணனே பரதத்வம்" என்று அறுதியிட, வித்யாஶுல்கமும் அறுந்து இவர் முன்பே விழ, அத்தை ராஜாவும் வித்வான்களும் மற்ற ஜநங்களும் ப்ரத்யக்ஷமாகக் கண்டு, ஆஶ்சர்யப்பட்டு, வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கை விரித்தருளின விஷ்ணுசித்தன் திருவடிகளிலே [3]ப்ரவணராய், ஆழ்வாரை ஆனைமேலேற்றி, ஸகலவாத்யங்களோடும் ஸகலபிருதுகளோடும் திருவீதி வலஞ்செய்யப் பண்ணிக்கொண்டு, "பட்டர்பிரான்" என்று திருநாமம் சாத்தி ஸேவித்துக்கொண்டிருக்க, ஸகலலோக மாதாபிதாக்களான திவ்ய தம்பதிகளுடைய பாரம்யத்தை வெளியிட்டருளின ஆழ்வாரை எம்பெருமானும் தேவீபூஷண ஆயுதபரிஜநங்களோடே [4]பெரிய திருவடிமேல் ஏறியருளி வந்து குளிரக்கடாக்ஷித்தருள, ஆழ்வாரும் ஆகாஶத்தில் அத்திரளைக்கண்டு, ஆனையினின்றும் இறங்கி, அதன் மணிகளையே தாளமாக்கிக் கொண்டு அந்த ஸ்ரீமந் நாராயணனுக்கு என்ன தீங்கு வருகிறதோ? என்று அத்தலைக்கு மங்களாஶாஸநமாய் "பல்லாண்டு பல்லாண்டு" என்று தொடங்கி மங்களாஶாஸநம் பண்ண, திவ்ய தம்பதிகளும் தங்களுடைய திவ்யகுண சேஷ்டிதங்களையும் ப்ரகாஶிப்பிக்க, அத்தலைக்கும் பல்லாண்டு பாடி இவ்வனுபவம் வடபெருங்கோயிலுடையானுடைய அநுக்ரஹமென்று கண்ணனவதாரம் முதலாக இன்புறும் நல்விளையாட்டுக்களையல்லா முறைத்துக் கொண்டு சில திவ்யதேஶங்களையும் பாடத் திருவுள்ளமாய் "பல்லாண்டு பல்லாண்டு" என்று தொடக்கமான பெரியாழ்வார் திருமொழியாலே அவ்வநுபவங்களை யெல்லாம் ப்ரகாஶிப்பித்தருளினார்.

---

1. குற்றம் கண்டுபிடிப்பவர்களாய் 2. எடுத்துச்சொல்லி அதற்குத்தக்கபடி 3. வணக்கம் செலுத்தியவராய் 4. கருடன்மேல்



அவதார ஸ்தலமான ஸ்ரீவில்லிபுத்தூரில் நீராட்டத்திற்கு
எழுந்தருளும் திருக்கோலத்தில் ஸேவைதரும்
ஆண்டாள்

கோதைப்பிராட்டி, சூடிக்கொடுத்த நாச்சியார்
என்று போற்றப்படுபவள்.

# ஆண்டாள் வைபவம்

ஆஷாடே பூர்வபல்குந்யாம் துலஸீகாநநோத்பவாம் |
பாண்ட்யே விஶ்வம்பராம் கோதாம் வந்தே ஶ்ரீரங்க நாயிகாம் ||

பூமிப்பிராட்டி அம்ஶமான ஆண்டாள் கலியுகத்தில் ௯௮-ஆவலான நளவர்ஷத்தில் ஆடிமாஸத்தில் ஶுக்லசதுர்த்தீ செவ்வாய்க்கிழமை கூடின பூர்வபல்குநீ நக்ஷத்ரத்தில் ஶ்ரீவில்லிபுத்தூரில் திருநந்தநவநத்தில் பெரியாழ்வார் திருத்துழாய்க்குப் பாத்தி கொத்திக்கொண்டிருக்கும்போது அதினின்றும் [1]ப்ராதுர்பவித்தருள, பெரியாழ்வாரும் ஆஶ்சர்யப்பட்டு அந்தக் கந்யகைக்குக் கோதை என்று திருநாமம் சாத்தி வளர்த்துக் கொண்டிருக்கும்போது,

வடபெருங்கோயிலானுக்குக் கட்டிவைத்த திருமாலையை ஒருநாள் அந்தக் கோதை எடுத்து சூட்டிக்கொண்டு மற்றுமுண்டான பூஷணங்களையும் பூட்டிக்கொண்டு ஒரு கண்ணாடியில் தம்மைப் பார்த்து "இவ்வழகு எம்பெருமானுக்கு ஒத்திருக்குமோ?" என்று பரீக்ஷித்துப் பலநாளும் இப்படியே பார்த்துக்கொண்டு அந்த மாலையைச் சுருட்டி வைத்துக்கொண்டிருக்க, அதை ஒருநாள் ஆழ்வார் கண்டு "இது [2]பகவதநர்ஹம்" என்று, இனி இப்படிச்செய்ய அடுக்காது என்றும் அருளிச் செய்திருக்க, அன்று இராத்திரியில் வடபெருங்கோயிலுடையானும் "அவள் சூட்டிக்கொடுத்த [3]மாலையேகாணும் நமக்கு உகந்திருக்கும்" என்று ஆழ்வாருக்கு ஸ்வப்நம் காட்டியருள, ஆழ்வாரும் திருத்துழாய்ப் பாத்தியில் ப்ராதுர்பாவத்தாலும் ஸ்வப்நத்தாலும் "பின்னைகொல்? நிலமாமகள்கொல்? திருமகள்கொல்? பிறந்திட்டாள்" என்று உகந்தருளி, சூடிக்கொடுத்த நாச்சியார் என்று அழைத்துக்கொண்டிருக்க,

ஆண்டாளும் [4]ப்ராப்தயௌவநையாய்ப் [5]பரபக்தி பரஜ்ஞாந பரம பக்திகளாலுண்டான பகவத்விஷய ப்ராவண்யத்தை உடையவளாய் அந்தப்ராவண்யமடியாக ஶ்ரீக்ருஷ்ண விரஹாஸஹிஷ்

1. தோன்ற 2. பகவானுக்குப் பயன்படாது 3. மாலையேதான் 4. யௌவனம் வந்தவளாய் 5. உயர் தெய்வத்தினிடம் கொண்ட பக்தி, அதைப்பற்றிய ஞானம், அதனிடம் அதிகமான பக்தி இவைகளால் உண்டாகிய, பகவான் விஷயமான ஈடுபாட்டுடன் கூடியவர்களாய்.

ணுக்களான கோபகந்யகைகள் 'துஷ்டகாளியதிஷ்டாத்ரக்ருஷ்ணோஹமிதி சாபரா' இத்யாதிகளிற்படியே க்ருஷ்ணனை அநுகரித்துத் தரித்தாப்போலே இவ்வாண்டாளும் மார்கழிநீராடி நோன்பு நோற்றுத் தரித்து அவ்வர்த்தத்தைத் திருப்பாவையாலே ப்ரகாசிப்பித்தருள, ஆழ்வாரும் ''சிந்தார்ணவகத: பாரந் நாஸஸாதாப்லவோ யதா'' என்கிறபடி வ்யாகுலராய் நாச்சியாரை அழைத்து 'நீர் யாருக்கு வாழ்க்கைப்பட உகந்திருக்கிறீர்?' என்ன, அவளும் ''மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்'' என்ன, ஆழ்வாரும் பின்னை என்? என்ன, அவளும் ''புள்வாய் பிளந்த மணிவண்ணனுக்கு என்னை வகுத்திடும்'' என்ன, ஆழ்வாரும் 'அவன் எவ்வூரான்?' என்ன, அவளும் ''அவன் ஊரெல்லாம் சொல்லும்'' என்ன, ஆழ்வாரும் திவ்யதேச மாஹாத்ம்யங்களை எல்லாம் அருளிச்செய்ய, தென்னாடும் வடநாடும் தொழநின்ற திருவரங்கத் திருப்பதி வைபவத்தைக் கேட்டருளின இவ்வாண்டாள் [1]லஜ்ஜாவிஷ்டையாய்ச் சில [2]மநோரதங்களை அநுபவித்து, இவ்வநுபவத்தை ''தையொரு திங்களும் தரை விளக்கி'' என்று தொடங்கி நாச்சியார் திருமொழியாலே ப்ரகாசிப்பித்தருளித் திருவரங்கச் செல்வனாரிடத்தில் சூடிக்கொண்ட நெஞ்சினளாயிருக்க, ஆழ்வாரும் இது கூடும்படி எங்ஙனே! என்றிருக்க, அன்று இராத்ரியில் திருவரங்கச் செல்வனார் உம்முடைய பெண்ணை கோதையை அழைத்துக் கொண்டு வாருமென்று ஸ்வப்நம் காட்டியருள, ஆழ்வாரும் ஸந்துஷ்டராயிருக்க, கோயிலில் அழகிய மணவாளனும் ஸமஸ்த பிருதுகளோடே ஆண்டாளை அழைத்துக் கொண்டு வரும்படி பரிஜனங்களுக்கு ஸ்வப்நம் காட்டியருள, அவர்களும் அப்படியே ஸ்ரீவில்லிபுத்தூரேறச் சென்று ஆழ்வாரிடத்தில் அழகிய மணவாளன் காட்டின ஸ்வப்நத்தை விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வாரும் உகந்தருளி வடபெருங்கோயிலுடையான் [3]நியமநம் பெற்று ஆண்டாளைத் திருப்பல்லக்கிலேற்றிக் கொண்டு கோயிலேற எழுந்தருளி அழகிய மணவாளன் திருமண்டபத்தில் நிற்க,

ஆண்டாளும் எல்லாரும் காணும்படி திருமேனி வடிவழகாலே திருவாபரணங்களுக்கும் அழகு கொடுத்துக் கொண்டு அழகிய

1. வெட்கமடைந்தவளாய், 2. எண்ணங்களை, 3. உத்தரவு பெற்று.

மணவாளன் பக்கற் சென்று [1]அந்தர்பவித்தருள, இதைக் கண்டு ஆழ்வாரும் ஸமஸ்த ஜநங்களும் ஆஸ்சர்யப்பட, அழகிய மணவாள னும் நமக்கு [2]ஸ்வஸுரரான பெரியாழ்வாரென்று அருளப்பாடிட்டுத் திருமாலை முதலான வரிசைகளையும் [3]ப்ரஸாதித்தருளி, ஸ்ரீவில்லி புத்தூரேறப் போகும்படி விடைகொடுத்தருள, ஆழ்வாரும் இப்படி யொரு விஶேஷகடாக்ஷம் அழகிய மணவாளன் செய்தருளின னென்று உள் மகிழ்ந்து வடபெருங் கோயிலுடையானுக்குக் கைங் கர்யம் பண்ணுவதாய் மீண்டு எழுந்தருளினார்.



ஸ்ரீ ரங்கமன்னாரும், ஆண்டாளும்

1. மறைந்தருள 2. மாமனாரான 3. கொடுத்தருளி



அவதாரஸ்தலமான திருமண்டங்குடியில் ஸேவைதரும்

தொண்டரடிப்பொடியாழ்வார்

பக்தாங்க்ரிரேணு, விப்ரநாராயணர், திருமண்டங்குடியார்,
பள்ளியுணர்த்தியபிரான் என்று போற்றப்படுபவர்

# தொண்டரடிப்பொடியாழ்வார் வைபவம்

*கோதண்டே ஜ்யேஷ்ட நக்ஷத்ரே மண்டங்குடி புரோத்பவம் |*
*சோளோர்வ்யாம் வநமாலாம்ஶம் பக்தாங்க்ரீ ரேணுமாஶ்ரயே ||*

வநமாலாம்ஶரான தொண்டரடிப்பொடியாழ்வார் கலியுகத்தில் ௨அ௯ - ஆவதான ப்ரபவ ஸம்வத்ஸரத்தில் மார்கழி மாஸத்தில் க்ருஷ்ணசதுர்தஶீ செவ்வாய்க் கிழமை கூடின கேட்டை நக்ஷத்ரத்தில் திருமண்டங்குடியில் ஒரு புரஶ்சூட ஸ்ரீ வைஷ்ணவருக்குப் புத்ரராயவதரிக்க, அவருக்கு விப்ரநாராயணரென்று திருநாமம் சாத்தி, [1]ஸ்வவேதமான யஜுர்வேதாதியாய் ஸகல வேத வேதாங்கங்களையும் [2]அதிகரிப்பிக்க, அவரும் [3]ஸர்வஸமர்த்தராய் [4]க்ருதோத்வஹராய் பகவத் பக்தி மேலிட்டுத் திருவரங்கத் திருப்பதியில் அழகிய மணவாளனைத் திருவடி தொழுது நிற்க, அழகிய மணவாளனும் தமக்குத் திருமாலைக் கைங்கர்யம் பண்ணிக் கொண்டிருக்கும்படி நியமித்தருள, ஸ்ரீவிப்ரநாராயணரும் அழகிய மணவாளனுக்குத் திருநந்தநவநஞ் செய்து, திருமாலைக்கட்டிச் சாத்திக் கொண்டு, [5]ப்ராக்ருத விஷயத்தில் அதிவிரக்தராய், பகவத் விஷயத்தில் [6]அத்யந்தாநுரக்தராய்த் தம்மை ஆஶ்ரயித்தவர்களையும் தம்மைப் போலே ஆக்கவல்லராய் இருந்து கொண்டிருக்க,

அப்போது பெருமாளைப் பிராட்டியார் பார்த்து, இப்படிக் கொத்த விரக்த பக்தரை ப்ராக்ருதவிஷயம் என்ன செய்யக் கடவது? என்று விண்ணப்பஞ் செய்ய, பெருமாளும் லீலார்த்தமாகப் புன்முறுவல் செய்து, "இவரை அத்யந்த ப்ராக்ருத விஷயாஸக்தராகும்படி பண்ணுகிறேன் பார்" என்றருளிச் செய்ய, அப்போது தேவதேவியென்று பேருடையவளான ஒரு தேவஸ்த்ரீ தன் ஸகியோடே ஒரு வேஶ்யாரூபமாய் வந்து திருக்கரம்பனூரில் வாஸம் பண்ணிக் கொண்டு விப்ரநாராயணர் திருநந்தநவநத்தருகே ஒரு [7]வ்ருக்ஷச்சாயையிலே நின்று கொண்டு [8]விலாஸவீக்ஷணம் பண்

1. தமது வேதமான 2. கற்கும்படி செய்ய 3. எல்லா வகையிலும் திறமைசாலியாய் 4. கலியாணம் செய்து கொண்டவராய் 5. உலக விஷயங்களில் 6. மிகவும் ஈடுபாடுள்ளவராய் 7. மரத்து நிழலில் 8. குறுகுறுப்பான பார்வை.

ணிக் கொண்டிருக்க, விப்ரநாராயணரும் கண்ணெடுத்துப் பாராமலிருக்க, தேவதேவியும் தன்னுபரணாதிகளையெல்லாம் ஸகி கையில் கொடுத்து விட்டு, [1]மலிநவஸ்த்ரதரையாய் வந்து, விப்ரநாராயணரைத் தன்டன் ஸமர்ப்பித்து, 'மஹாபாபிஷ்டையான அடியேனுக்குத் தேவரீர் ஸேவையாலே [2]ஸத்வமுண்டாய்க் கைங்கர்ய புத்தி மேலிட்டிருக்கிறது, தேவரீர் திருநந்தநவநத்தில் களையெடுத்துக் கொண்டிருக்கிறேன்' என்று விண்ணப்பஞ் செய்ய, விப்ரநாராயணரும் அநுமதி பண்ண, தேவதேவியும் அப்படியே ஆறுமாஸம் பூஞ்செடிகளுக்குக் களையெடுத்துத் தண்ணீர் பரிமாறிக் கொண்டிருக்க, ஒரு நாள் மஹாவர்ஷமுண்டாக, விப்ரநாராயணரும் பர்ண சாலையிலிருந்துகொண்டு [3]வர்ஷாஹதையான தேவதேவியை உள் புகுரும்படி நியமிக்க, பின்பு தேவதேவியும் உள் புகுர, விப்ரநாராயணரும் பகவல்லீலையாலே ப்ராக்ருத விஷயாஸக்தராய் அன்று முதல் இருந்துகொண்டு, திருக்கரம்பனூரில் ஸர்வாபரண பூஷிதையான தேவதேவினுடைய க்ருஹத்தில் அவள் கேட்ட [4]அர்த்தத்தைக் கொடுக்க [5]விரகு இல்லாமையாலே அவ்வாசலிலே தயங்கி நின்று மூசித்துக் கிடக்க, அப்போது பெருமாளும் பிராட்டிக்கு அவரைக் காண்பிக்க, பிராட்டியும் அவரை மீட்டு முன்போல் கைங்கர்யபரராக்கும்படி ப்ரார்த்திக்க, பெருமாளும் தம் ஸந்நிதியில் ஒரு தங்க வட்டிலை எடுத்துக் கொண்டு போய்த் தேவதேவி க்ருஹத்திற் கொடுக்க, அவளும் 'நீர் ஆர்?' என்ன, பெருமாளும் "நான் அழகிய மணவாளதாஸன், விப்ரநாராயணர் கொடுத்து வரச் சொன்னார்" என்று சொல்லிப் போக, அவளும் வாசலினின்றும் விப்ரநாராயணரை அழைத்துக்கொண்டு முன்புபோலேயிருக்க, விடியோறை கோயிலில் தங்கவட்டில் இல்லாமையாலே அதிகாரிகள் பரிஜனங்களைத் தண்டிக்க, அவர்களும் அங்கங்கே விசாரிக்க, கரம்பனூரில் தேவதேவி க்ருஹத்தில் இருக்கக் கண்டு அதிகாரியும் அவளைக் கேட்க, அவளும் 'விப்ரநாராயணர் கொடுத்தார்' என்ன, அவனும் விப்ரநாராயணரை அழைத்துக் கேட்க, அவரும் 'நான் அறியேன்' என்ன, அவ்வளவில் பெருமாளும் ஒரு அர்ச்சகனிடத்தில் ஆவேஶித்து, "விப்ரநாராயணருக்காகத் தேவதேவிக்கு

1. அழுக்குத்துணி உடுத்தி 2. நற்குணம் உண்டாகி 3. மழையால் தாக்கப்பட்ட 4. பணத்தை 5. ஆதாரம்.

நாமே கொடுத்தோம். இது நம்முடைய லீலார்த்தப்ரதிஜ்ஞை" என்றும், "ஒருவரையும் ஶிக்ஷிக்க வேண்டியதில்லை" என்றும் அருளிச் செய்ய, அதிகாரிகளும் தெளிந்து ஆஶ்சர்யப்பட்டுப் போக,

விப்ரநாராயணரும் மாதரார் கயற்கண்ணென்னும் வலையுள்பட்டழுந்திய தம்மை நொந்து [1]அகம்யாகமந ப்ராயஶ்சித்தத்தையும் பண்ணி, "தேவுமற்றறியேன்" என்ற மதுரகவிகள் உள்கருத்தை "அரங்கன் திருமுற்றம் சேறுசெய் தொண்டர்" என்று விவரித்தருளி அவ்வரங்கனும், சக்கரவர்த்தித் திருமகனும் கண்ணனுமாக அநுபவித்த குலஶேகராழ்வார் படியைக் கொண்டு அவ்விருவர்களுக்கும் தீங்கு வாராதிருக்கும்படி பல்லாண்டு பாடின பெரியாழ்வார் திருவுள்ளக் கருத்தை ஆண்டாள் அறிந்து அவ்வநுபவத்தைத் தாமநுபவித்து, "செம்மையுடைய திருவரங்கர் தாம் பணித்த மெய்ம்மைப் பெருவார்த்தை விட்டுசித்தர் கேட்டிருப்பர்" என்று பெரியாழ்வார்க் காட்பட வேணுமென்று அருளிச் செய்த அர்த்தத்தைத் தெளிந்து பாகவத ஸ்ரீபாத தீர்த்தத்தை ஸ்வீகரித்து அழகியமணவாளன் திருவடி தொழுது நிற்க, அழகிய மணவாளனும் 'தொண்டரடிப் பொடியாழ்வார்' என்று அருளப்பாடிட்டு வரிசைகளும் [2]ப்ரஸாதிக்க, ஆழ்வாரும் அவைகளைப் பெற்றுத் தம்மிடத்தில் அழகிய மணவாளன் விஶேஷகடாக்ஷம் செய்தருளினபடியாலே "உன்னடியார்க்காட் படுத்தாய் பள்ளியெழுந்தருளாய்" என்று [3]மநோரதித்து அநுபவித்து அவ்வநுபவத்தைத் திருமாலைத் திருப்பள்ளியெழுச்சிகளாலே ப்ரகாஶிப்பித்தருள, தேவதேவியும் தன்னுடைய தனங்களையெல்லாம் பெரிய பெருமாள் கைங்கர்யத்தில் வ்யயம் பண்ணி பாகவத ஸ்ரீபாததீர்த்தத்தாலே பரிஶுத்தையாய்ப் போக, தொண்டரடிப் பொடியாழ்வாரும் தம்மிடத்தில் அழகிய மணவாளன் செய்தருளின விஶேஷகடாக்ஷத்தையும் தெய்வப்பிறவிகளுக்கும் வர்ணாஶ்ரமாநுகுணமாக ப்ராயஶ்சித்தம் செய்து பாபநிவ்ருத்தி செய்யவேண்டுமர்த்தத்தையும், ஸ்ரீபாததீர்த்தப் பாவத்தையும் ப்ரகாஶிப்பித்தருளிச் [4]சேதநர்களை உஜ்ஜீவிப்பித்தருளினார்.

---

1. சேரத்தகாதவளைச் சேர்ந்ததற்கு 2. கொடுத்தருள 3. விரும்பி 4. ஜனங்களை.



அவதார ஸ்தலமான உறையூரில் ஸேவைதரும்

**திருப்பாணாழ்வார்**

பாணர், யோகிவாஹநர், முநிவாஹநர் என்று போற்றப்படுபவர்

# திருப்பாணாழ்வார் வைபவம்

கார்த்திகே ரோஹிணீஜாதம் ஸ்ரீபாணம் நிசுளாபுரே ।
ஸ்ரீவத்ஸாம்ஸம் காயகேந்த்ரம் முநிவாஹநமாஸ்ரயே ॥

ஸ்ரீவத்ஸாம்ஸரான திருப்பாணாழ்வார் கலியுகத்தில் ௩௪௩-ஆவதான துர்மதி வர்ஷத்தில் வ்ருஸ்சிகமாஸத்தில் க்ருஷ்ண த்விதீயை புதன் கிழமை கூடின ரோஹிணீ நக்ஷத்ரத்தில் உறையூரில் ஸத்யத்தில் அவதரித்திருக்க, மஹாஸுக்ருதிகளாயும் ஒரு ப்ராப்த விசேஷத்தாலே சண்டாள ஜந்மிகளாயுமிருக்கிற தம்பதிகள் வயல் நடுவே இந்த ஸிஸுவைக் கண்டு [1]அநபத்யர்களாகையாலே மகிழ்ந்து எடுத்துக்கொண்டுபோய் வளர்த்துக் கொண்டிருக்க, அந்தச் சிஸுவும் [2]கோக்ஷீரத்தாலே [3]அபிவ்ருத்தமாய்த் [4]தேஜிஷ்டமாயிருக்கக் கண்டு, சுத்தமான ஆஹாரத்தை அந்தத் தம்பதிகள் கொடுத்து வளர்க்க, ஆழ்வாரும் பேச்சுத் தொடக்கமாகக் கானம் பண்ணிக்கொண்டு வீணையும் கையுமாய் "நவா ஏவம் விதிகிஞ்சநாநந்நம் பவதி" என்கிற உபநிஷத்தின் படியே அயோநிஜரான தமக்குச் சண்டாள தம்பதிகள் கொடுத்த ஸுத்தாஹாரம் பாதகம் இல்லாவிடிலும்சண்டாளக்ருஹத்தில் வளர்த்தியாலே [5]லோகாநுவர்த்தியாய்த் திருக்காவேரிக் கரையில் பெரிய பெருமாள் ஸந்நிதியை நோக்கிக் கொண்டு நம்பாடுவானைப் போலே பலநாளும் எம்பெருமான் புகழ் பாடிக் கொண்டிருக்க, அப்போது பெரிய பெருமாள் திருவுள்ளமுவந்து தம்மிடத்தில் பக்தரான லோகஸாரங்க மாமுநிக்கு "திருப்பாணாழ்வாரை உம்முடைய தோளின் மேல் ஏற்றிக்கொண்டு நம்மருகே வரக்கடவீர்" என்று ஸ்வப்நம் காட்டியருள, அவரும் விடிவோரை திருப்பாணாழ்வாரிருக்கிற இடத்தைச் சென்று, பெரிய பெருமாள் காட்டின ஸ்வப்நத்தை விண்ணப்பஞ் செய்ய, ஆழ்வாரும் "கிட்டவொண்ணாத ஜாதியான அடியேனை இப்படிக்குச் செய்யலாமோ?" என்று அங்குள்ள பாமரர்களுக்காக அருளிச்செய்து "விதிவாய்க்கின்றுவாய்க்குங் கண்டீர்" "அவன் செய்யும் சேமத்தை எண்ணித் தெளிவுற்று நிற்க வேண்டும்" என்று திருவுள்ளம் பற்றியருள, லோகஸாரங்க மஹாமுநியும் ஓர் [6]ஆதிவாஹிகரோபாதி திருப்பாணாழ்வாரைத் தந்தோளி லெழுந்தருளப் பண்ணிக்

1. பிள்ளைப்பேறு இல்லாமையாலே 2. பசும்பால் 3. வளர்ந்து 4. ஒளி மிக்கதாய் 5. உலக நடவடிக்கையைப் பின்பற்றி 6. பாரம் சுமப்பவர்போலே.



ஸ்ரீரங்கம், ஸ்ரீரங்கநாதர் (உத்ஸவர்)

கொண்டு பெரிய பெருமாள் முன்பே இறக்கியருள, திருப்பாணாழ்வாரும் [1]ஸ்தநந்தயப்ரஜை முலை தேடி வாய் வைக்குமா போலே ஶேஷபூதர் இழியுந்துறையான திருவடிகளிலே நெஞ்சம் குடிபுகுந்து அவ்வழியாய்த் திருமுடியளவும் கண்டு அநுபவித்து, அவ்வநுபவத்தை அமலனாதிபிரானாலே ப்ரகாஶிப்பித்தருளி, 'ஆஜாநஸித்தருக்கும் லோகாநுவர்த்தநம் வேணும்' என்றும், 'களவு வெளிப்பட்ட பின்பு இடைச் சேரியில் வளர்ந்த கண்ணன் ஸாந்தீபிநியினிடத்தில் வேதாத்யயநம் பண்ணினாப் போலே லோகாநுவர்த்தநம் வேண்டுவதில்லை' என்றும், 'இதுவும் அவதார விஶேஷர்களுக்கே தகும்' என்றும் காட்டியருளி, அங்குள்ள சேதநரெல்லாருங் காணப் பெரிய பெருமாள் திருமேனியில் அந்தர்ப்பவித்தருளிக் கலங்கின சேதநர்களைத் தெளிவிப்பித்தருளினார்.

---

1. பால் குடிக்கும் சிசு.

# திருமங்கையாழ்வார் வைபவம்

*கார்த்திகே க்ருத்திகாஜாதம் சதுஷ்கவி ஶிகாமணிம் |*
*ஷட்ப்ரபந்தக்ருதம் ஶார்ங்கமூர்த்திம் கலியமாஶ்ரயே ||*

ஶார்ங்காம்ஶரான திருமங்கையாழ்வார் கலியுகத்தில் ௩௯அ-ஆவதான நளவருஷத்தில் வ்ருஶ்சிகமாஸத்தில் பூர்ணிமை வியாழக்கிழமை கூடின கிருத்திகா நக்ஷத்ரத்தில் திருவாலி திருநகரியில் நீலன் என்கிற ஒரு [1]சதுர்த்தவர்ணஸ்த்தனுக்குப் புத்ரராய் அவதரித்து ஸ்வகுலவித்யையான தநுஶ்ஶாஸ்த்ராதிகளிலே ஸமர்த்தராய்ச் சோள ராஜாவினிடத்தில் ஓரதிகாரத்திலிருந்துகொண்டு தாளூதுவான், நீர்மேல் நடப்பான், நிழலில் மறைவான், தோலா வழக்கன் என்கிற நாலு மந்த்ரிகளோடே கூடத் தாமும் ஆடல்மா வலவராய், ஶத்ருவை ஜயிக்கையாலே பரகாலனென்கிற திருநாமத்தையுடையவராய்ப் போருகிற காலத்தில்,

பூர்வம்ஶையாய் ஆம்பலோடையிலே பிறந்திருந்த ஒரு பெண்ணை ஒரு வைஶ்யன் கண்டு அந்தப் பெண்ணை எடுத்துக் கொண்டுபோய் வளர்த்துப் பருவம் நிறைந்தவாறே "யார்க்கு வாழ்க்கைப் படுத்துவோம்?" என்று நினைத்துக்கொண்டிருக்க, அந்தப் பெண்ணின் பெருமையைச் சிலர் வந்து திருமங்கையாழ்வாருக்கு அறிவிக்க, ஆழ்வாரும் அந்த வைஶ்யரைக் கண்டு "இப்பெண்பிள்ளை யார்?" என்று கேட்க, அவனும் 'குமுதவநத்திற்கண்டு எடுத்தபடியால் குமுதவல்லியார் என்று பேரிட்டு வளர்த்த என் பெண்பிள்ளை' என்ன, ஆழ்வாரும் 'ஆகில் எனக்கு விவாஹம் பண்ணிக் கொடும்' என்று வஸ்த்ரபூஷணாதிகளைக் கொடுக்க, அவரும் அப் பெண்பிள்ளை ஸம்மதியைக் கேட்க, அப்பெண்ணும் "சக்ராங்கிதனைய்ப் பகவத்பக்தனாய்த் ததீயாராதநம் பண்ணிக் கொண்டிருக்க வேண்டாவோ?' என்ன, ஆழ்வாரும் 'அப்படியே செய்யக் கடவேன்' என்று திருநறையூர் நம்பி ஸந்நிதியில் திருவிலச்சினையை ப்ரார்த்திக்க, நம்பியும் திருவிலச்சினையையும் திருமண்காப்பையும் திருமந்த்ரார்த்தத்தையும் பாமரர் கண்படாமல் ப்ரஸாதித்தருள, ஆழ்வாரும் சக்ராங்கிதராய்க் குமுதவல்லியாரையும் மணம் புணர்ந்து

1. நான்காவது வருணத்தவருக்கு 2. ஸமாச்ரயணம் செய்து கொண்டவராய்.



அவதார ஸ்தலமான திருவாலி திருநகரியில் ஸேவைதரும்

**திருமங்கையாழ்வார் (தேவியுடன்)**

**ஆலிநாடன், கலியன், நாலுகவிப்பெருமாள், அருள்மாரி, மங்கையர்கோன், பரகாலன் என்று போற்றப்படுபவர்.**

ததீயாராதநமும் பண்ணிக் கொண்டிருக்க, அத்தைச் சோளராஜாவும் [1]'பஹு த்ரவ்ய வ்யயம் பண்ணுகிறார்' என்று தனது சாரர்களாலே அறிந்து 'அந்தப்பரகாலனைப் பிடித்துக் கொண்டு வாருங்கள்' என்று சிலரை யாஜ்ஞாபிக்க, ஆழ்வாரும் அவர்களை அடித்தோட்டி விட, பின்னையும் ஸேனையோடே சோளராஜன் வர, அந்த சேனையையும் அடித்தோட்டி விட, ராஜாவும் பரகாலரைப் பார்த்து 'உம்முடைய பராக்ரமத்தாலே[2] ஸந்துஷ்டனானேன்; உமக்கு[3] விப்ரியம் செய்யேன்' என்று ப்ரதிஜ்ஞை பண்ணிக் கொடுத்தழைக்க, ஆழ்வாரும் அவன் பக்கல் போக, அவனும் ஒரு தேவாலயத்தில் காவலிட்டு வைக்க, ஆழ்வாரும் ததீயாராதந [4]பங்கத்தாலே வ்யாகுலராய் உபவாஸத்தோடேயிருக்க, பேரருளாளரும், 'நம் கோயிலேற வந்து நம்மருகேயிருக்கிற நிதியைக்கொண்டு காவலை விடுவித்துக்கொள்ளும்' என்று ஸ்வப்நம் காட்டியருள, ஆழ்வாரும் ராஜபுருஷரோடே 'வ்யயம் பண்ணின தநத்தைக் கொடுத்து விடுகிறேன்; வாரும்' என்றழைத்துக் கொண்டு பெருமாள் கோயிலேறப் போய்ப் பேரருளாளரைத் திருவடி தொழுது அருகேயிருந்த நிதியை எடுத்து ராஜபுருஷர் கையிற் கொடுத்து, அதிகமான த்ரவ்யத்தைத் ததீயாராதநத்தில் உபயோகித்துக் கொண்டிருக்க, அவர்களும் அந்தத் தநத்தை ராஜா பக்கல் வைத்து அச் செய்தியைச் சொல்ல, ராஜாவும் விஸ்மிதனாய் அந்தத் தனத்தை ஆழ்வார் திருவடிகளிலே ஸமர்ப்பித்து அபராதக்ஷாமணம் பண்ணிக்கொண்டு போக, ஆழ்வாரும் அத்தனங்களைக் கொண்டு ததீயாராதனம் செய்து பின்பு கையிலொன்றுமில்லாமையால் "அஸாதுப்யோர்த்தமாதாய ஸாதுப்யஸ் ஸம்ப்ரயச்சதி" என்கிறபடியே ஆழ்வாரும் மந்த்ரிகளுடனே வழிகட்டி [5]அவைஷ்ணவர்களிடத்தினின்றும் தநத்தைப் பறித்துக் கொண்டு வந்து ததீயாராதநம் பண்ணிக் கொண்டிருக்க, ஒருநாள் அவைஷ்ணவர் அகப்படாமையாலே ஒரு வீட்டின் புறக்கடையில் பதுங்கி அங்கேற வந்த பெண்பிள்ளை பூஷணங்களை அபஹரித்துக்கொண்டு விட, அவளும் தன் பர்த்தாவினிடத்தில் 'ஸ்ரீமந்நாராயணன் நம் பூஷணத்தை அங்கீகரித்தான்' என்று சொல்ல, அத்தைக் கேட்டு ஆழ்வாரும் 'வைஷ்ணவதநம்' என்று அத்தைக் கொடுத்துவிட்டு வழி கட்டிப் பார்த்துக் கொண்டு நிற்க, எம்பெருமானும் பிராட்டியும் ஸர்

1. அதிகப்பணச் செலவு 2. மகிழ்ச்சியடைந்தேன் 3. தீங்கு 4. தவறி விட்டமையாலே வருந்தி 5. வைஷ்ணவர் அல்லாதவர்.

வாபரண பூஷிதர்களாய்த் திருமணம் புணர்ந்து பரிஜனங்களோடே அவைஷ்ணவர் போலே வந்து நிற்க, ஆழ்வாரும் மகிழ்ந்துகொண்டு ஸமஸ்த பூஷணங்களையும் அபஹரித்து ஒரு பெட்டியில் வைத்து எடுக்க, அது எடுக்க ஒண்ணாமையாலே மணவாளப் பிள்ளையைப் பார்த்து 'இப் பெட்டியை எடுக்க வொண்ணாதே பண்ணின மந்த்ரத்தை எனக்குச் சொல்லக் கடவை' என்று வாளை உருவிக் கொண்டு கேட்க, மணவாளப் பிள்ளையான எம்பெருமானும் 'நம் கலியர்' என்றருளிச் செய்து திருமந்த்ரத்தை அவர் செவியில் சொல்லிப் பெரியபிராட்டியாரும் தாமுமாக மற்றுமுள்ள தேவீபூஷணாயுத பரிஜனங்களோடே ஸேவை ஸாதித்தருள, ஆழ்வாரும் திவ்ய தம்பதிகளுடைய திருவடிகளிலே ஶரணம் புகுந்து ஸ்வரூபாதிகளை அநுபவித்து அவ்வநுபவத்தைப் பெரிய திருமொழி, திருக்குறுந் தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்கிற ப்ரபந்தங்களாலே ப்ரகாஶிப்பித்தருளி ஆசு, மதுரம், சித்ரம், விஸ்தாரம் முதலான சாதுர்யத்தையுடைய திவ்ய கவிதையாலே 'நாலுகவிப்பெருமாள்' என்று ப்ரஸித்தராய்,

திவ்யதேஶயாத்ரை பண்ணிக் கொண்டு, காழிச்சீராமவிண்ணகரத்தில் நாலுகவிப் பெருமாளென்று பிருதூதிக்கொண்டு எழுந்தருளியிருக்கும் போது, ஸம்பந்தமூர்த்தியென்கிற ஒரு தமிழ்க் கவி வந்து பிருதுகளை நிர்ப்பந்திக்க, ஆழ்வாரும் "ஒரு குறளாயிரு நிலம்" என்கிற பாட்டைக் கொண்டு அவனை ஜயித்து, "ஆலிநாட னருள்மாரி யரட்ட முக்கி யடையார் சீயம்" என்கிற திருநாமங்களை ப்ரஸித்தமாக்கி, அவனாலே 'நாலுகவிப் பெருமாள்' என்று பஹுமாநம் பண்ணப் பட்டு, திருவரங்கத் திருப்பதியில் அழகிய மணவாளனைத் திருவடி தொழுது, மண்டப கோபுராதி கைங்கர்யங்களுக்காக மந்த்ரிகளோடே கூட திருநாகைப் பட்டணத்தில் ஸ்வர்ணமயமான பௌத்த விக்ரஹத்தை எடுத்துக் கொண்டு வந்து, அத்தையுருக்கித் தங்கமாக்கித் திருமதிள் முதலான கைங்கர்யங்களைச் செய்து கொண்டிருக்க,

ஒரு திருக்கார்த்திகை மஹோத்ஸவத்தில் பெருமாளும் நாச்சிமார்களும் திருமஞ்சநம் கொண்டருளியிருக்கும்போது, திருமங்கை

யாழ்வார் ஸேவித்துநிற்க, திவ்யதம்பதிகளும் குளிரக்கடாக்ஷித்தருள, ஆழ்வாரும் 'திருவாய்மொழிக்கு வேதஸாம்யத்தையும் ப்ரஸாதித்து, திருநகரியினின்றும் நம்மாழ்வாரை எழுந்தருளப் பண்ணி, வேதபாராயணத்தோடு மார்கழி ஶுக்ல ஏகாதஶியில் திருவாய்மொழியும் கேட்டருளவேணும்' என்று ப்ரார்த்திக்க, பெருமாளும் அப்படியே திருவுள்ளம்பற்றியருள, ஆழ்வாரும் ஒரு பரமபதநாதனைத் திருப்ரதிஷ்டைசெய்து, ஒரு பரமபத வாசல் உண்டாக்கி, அந்த ஸந்நிதியில் அழகிய மணவாளனுக்குத் திருநகரி நம்மாழ்வாரை எழுந்தருளப்பண்ணிவைத்து, திருவத்யயநோத்ஸவத்தைப் பத்து நாளில் நடப்பித்து, அப்படியே [1]ப்ரதிஸம்வத்ஸரம் நடந்து வரும்படி பண்ணிவைக்க, அழகிய மணவாளனும் குளிரக்கடாக்ஷித்து வரிசைகளையும் [2]ப்ரஸாதிக்க, திருமங்கையாழ்வாரும் அவைகளைப்பெற்று ஸந்துஷ்டராய் அமலனாதிபிரானில் [3]ப்ரதிபாதிக்கிற ப்ரஹ்மாநுபவத்தை,

> "பக்த்யா பரமயா வாபி ப்ரபத்த்யா வா மஹாமுநே |
> ப்ராப்யோஹம் நாந்யதா ப்ராப்ய:"

என்றும், "ஶரணம் வ்ரஜ-மோக்ஷயிஷ்யாமி" என்றும் சொல்லுகிறபடியே ஓரஞ்சலிபண்ணிக் கேட்டவர்களுக்கு அல்லது ஶ்ரிய:பதியான எம்பெருமான் கொடானென்றும், அந்த ஶரணாகதிப்ரகாரத்தையும், அப்படி நிஷ்டையுடையவனுக்குக் கைங்கர்யம் பாகவதபர்யந்தமாமென்றும், இவ்வர்த்தங்களையெல்லாம் [4]ஸ்வப்ரபந்தங்களாலே ப்ரகாஶிப்பித்து லோகத்தை உஜ்ஜீவிப்பித்தருளினார்.

ஆழ்வார்கள் வைபவம் முற்றிற்று

———

1. பிரதி வருஷம் 2. கொடுத்தருள 3. சொல்லுகிற 4. தமது பிரபந்தங்களால்.

# ஆசார்யர்கள் வைபவம்

பின்பு சிலநாள் கழிந்தவாறே ஆழ்வார்கள் அருளிச்செய்த திவ்யப்ரபந்தங்களும் காலவைஷம்யத்தாலே [1]லுப்தங்களாய், திருவத்யயநோத்ஸவாதிகளுமில்லாமலிருக்க, எம்பெருமான் "ஆசார்யர்களை அவதரிப்பித்துக் [2]கார்யங்கொள்ளவேணும்" என்றும், அவ்வழியாலே [3] அவிச்சிந்நமாகக் குருபரம்பரையை நடத்துகைக்காக ஸ்ரீமந் நாதமுநிகள் முதலாக ஸ்ரீமத் வேதாந்த தேசிகனளவாக இருந்துள்ள ஆசார்யர்களை அவதரிப்பித்துக் கார்யங்கொண்டு, பின்பு இச்செல்வம் [4]ஆகல்பமாகக் குறையற்றிருக்குமென்று திருவுள்ளமுகந்தருளினான். ஆகையாலிறே, "நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம்" என்றும், "நாதமுனிகழலே, நாளுந்தொழுதெழுவோம் நமக்கார் நிகர் நானிலத்தே" என்றும் நம் தேசிகன் அருளிச்செய்தார்.

அவர்கள் அவதார க்ரமங்கள் எங்ஙனே என்னில்:—

கஜாநநாம்ஸரான ஸ்ரீமந்நாதமுநிகள் கலியுகத்தில் ௩௯அ௫—ஆவதான ஸோபக்ருத்வர்ஷம் ஆனிமாஸம் ஶுக்லத்ரயோதஶீ புதன் கிழமை கூடின அநூராதா நக்ஷத்ரத்தில் வீரநாராயணபுரம் என்கிற காட்டுமன்னார் ஸந்நிதியில் அவதரித்தார்.

ஜயத்ஸேநாம்ஸரான உய்யக்கொண்டார் கலி ௩௯௨அ-ஆவதான பராபவ வர்ஷத்தில் சித்திரைமாஸம் ஶுக்லப்ரதமை புதன்கிழமை கூடின க்ருத்திகா நக்ஷத்ரத்தில் திருவெள்ளறையில் அவதரித்தார்.

குமுதாம்ஸரான மணக்கால்நம்பி கலி ௩௯௩௩-ஆவதான விரோதிக்ருத்வருஷம் மாசிமாஸம் ஶுக்லசதுர்த்தஶீ திங்கட்கிழமை கூடின மகாநக்ஷத்ரத்தில் மணக்காலக்ரஹாரத்தில் அவதரித்தார்.

ஸிம்ஹாநநாம்ஸரான ஆளவந்தார் கலி ௪௦௬அ-ஆவதான தாது வர்ஷம் ஆடிமாஸம் பூர்ணிமை புதன்கிழமை கூடின உத்தராஷாடா நக்ஷத்ரத்தில் வீரநாராயணபுரமென்கிற காட்டுமன்னார் ஸந்நிதியில் அவதரித்தார்.

---

1. மறைந்து 2. காரியம் செய்விக்க 3. இடைவிடாமல் 4. கல்பம் முடியும்வரை.

குமுதாம்ஸரான பெரியநம்பி கலி சOகக-ஆவதான ஹேவிளம்பி வருஷம் மார்கழி மாஸம் க்ருஷ்ணசதுர்த்தஸீ புதன்கிழமை கூடின ஜ்யேஷ்டா நக்ஷத்ரத்தில் கோயிலிலே அவதரித்தார்.

ஸுமுகாம்ஸரான பெரிய திருமலைநம்பி கலி சOஎரு-ஆவதான ஸ்ரீமுகவர்ஷம் புரட்டாசிமாஸம் ஸுக்லபஞ்சமீ வெள்ளிக்கிழமை கூடின அநூராதா நக்ஷத்ரத்தில் திருமலையில் அவதரித்தார்.

புண்டரீகாம்ஸரான திருக்கோட்டியூர்நம்பி கலி சOஉக-ஆவதான ஸர்வஜித்வர்ஷம் வையாசிமாஸம் ஸுக்லப்ரதமை ஸ்திரவாரம் கூடின ரோஹிணீ நக்ஷத்ரத்தில் திருக்கோட்டியூரில் அவதரித்தார்.

ஸங்குகர்ணாம்ஸரான திருவரங்கப் பெருமாளரையர் கலியுகத்தில் சOருக-ஆவதான பிங்களவர்ஷம் வையாசிமாசம் க்ருஷ்ணப்ரதமை வெள்ளிக்கிழமை கூடின ஜ்யேஷ்டா நக்ஷத்ரத்தில் கோயிலிலே அவதரித்தார்.

வநமாலாம்ஸரான திருமாலையாண்டான் கலி சOகO-ஆவதான ஸர்வதாரி வர்ஷம் மாசிமாஸம் பூர்ணிமை வெள்ளிக்கிழமை கூடின மகா நக்ஷத்ரத்தில் அழகர் திருமலையில் அவதரித்தார்.

ஸ்ரீமச்சேஷாம்ஸபூதரான எம்பெருமானார் கலியுகம் சககக-ஆவதான பிங்களவர்ஷத்தில் சித்திரைமாஸம் ஸுக்லபஞ்சமீ வெள்ளிக்கிழமை கூடின திருவாதிரை நக்ஷத்ரத்தில் ஸ்ரீபெரும்பூதூரில் அவதரித்தார்.

சண்டாம்ஸரான கிடாம்பியாச்சான் கலி சகருக-ஆவதான ஹேவிளம்பி வர்ஷம் சித்திரைமாஸம் ஸுக்லத்வாதஸீ வெள்ளிக்கிழமை கூடின ஹஸ்தநக்ஷத்ரத்தில் பெருமாள் கோயிலில் அவதரித்தார்.

ஸர்வநேத்ராம்ஸரான கிடாம்பி ராமாநுசப்பிள்ளான் கலி சஉகO-ஆவதான ஸர்வதாரிவர்ஷம் ஐப்பசிமாஸம் ஸுக்லபஞ்சமீ திங்கட்கிழமை கூடின பூர்வாஷாடா நக்ஷத்ரத்தில் பெருமாள்கோயிலிலே அவதரித்தார்.

குமுதாக்ஷாம்ஸரான கிடாம்பி ஸ்ரீரங்கராஜர் கலியில் சஉசரு-ஆவதான ஸ்வபாநுவர்ஷத்தில் பங்குனிமாஸம் ஸுக்லஷஷ்டீ திங்கட்கிழமைகூடின ரோஹிணீ நக்ஷத்ரத்தில் பெருமாள்கோயிலிலே அவதரித்தார்.

ப்ரசண்டாம்ஶரான திருக்குருகைப்பிரான் பிள்ளான் கலியுகம் சகசுங-ஆவதான ப்லவ வர்ஷம் ஐப்பசிமாஸம் ஶுக்லபஞ்சமீ திங்கட்கிழமை கூடின பூர்வாஷாடா நக்ஷத்ரத்தில் திருமலையில் அவதரித்தார்.

விஜயாம்ஶரான ஸ்ரீவிஷ்ணுசித்தர் என்கிற எங்களாழ்வானும் கலி சஉ0அ-ஆவதான வ்யயவர்ஷம் ஆனிமாஸம் ஶுக்லத்வாதஶீ திங்கட்கிழமை கூடின ஸ்வாதீ நக்ஷத்ரத்தில் திருவெள்ளறையில் அவதரித்தார்.

ஸுபத்ராம்ஶரான நடாதூரம்மாள் கலியில் சஉசுஎ-ஆவதான பார்த்திவ வர்ஷம் சித்திரைமாஸம் பூர்ணிமை திங்கட்கிழமை கூடின சித்ரா நக்ஷத்ரத்தில் பெருமாள்கோயிலில் அவதரித்தார்.

ஸுப்ரதிஷ்டாம்ஶரான கிடாம்பி அப்பிள்ளார் கலி சஙஉஉ-ஆவதான விக்ரம வர்ஷம் சித்திரை மாஸம் ஶுக்லபஞ்சமீ வெள்ளிக்கிழமை கூடின திருவாதிரை நக்ஷத்ரத்தில் பெருமாள்கோயிலில் அவதரித்தார்.

ஸ்ரீவேங்கடேஶ கண்டாம்ஶரான ஸ்ரீமத் வேதாந்த தேஶிகன் கலி சஙஎக-ஆவதான ஶுக்லவர்ஷம் புரட்டாசிமாஸம் ஶுக்லதஶமீ புதவாரம் கூடின திருவோண நக்ஷத்ரத்தில் பெருமாள்கோயிலிலே திருத்தண்கா வென்கிற திவ்யதேஶத்தி லெழுந்தருளியிருக்கிற தீபப்ரகாஶர் ஸந்நிதி ஸமீபத்தில் அவதரித்தார்.

இவர்களவதரித்துச் செய்தருளினபடிகள் எங்ஙனே யென்னில் :—

# ஸ்ரீமந்நாதமுநிகள் வைபவம்

ஜ்யேஷ்டேऽநுராதாஸம்பூதம் வீரநாராயணே புரே |
கஜவக்த்ராம்ஶமாசார்ய மாத்யம் நாதமுநிம் பஜே ||

வீரநாராயணபுரத்தில் நித்யவாஸம் பண்ணுகிற ஆஜாநஶுத்த ஸ்ரீஶடமர்ஷண குலதிலகராயும் சொட்டைக்குலத்தரென்று ப்ரஸித்தருமான ஈஶ்வரமுநிகளுக்குக் கலியுகத்தில் ௩௯௮௫-ஆவதான ஶோபக்ருத்வர்ஷம் ஆனி அநுராதத்தில் ஒரு குமாரரவதரிக்க, அவருக்கு நாதர் என்று திருநாமம் சாத்தி, வேத வேதாங்கங்களையெல்லாம் அத்யயநம் பண்ணிவைக்க, அந்த நாதமுநிகளும் பிறவி தொடக்கமாகப் பகவத் பக்திமேலிட்டு, ஸர்வ வேதஶாஸ்த்ர ஸமர்த்தராயிருக்க, வங்கிப்புரத்தாச்சியும் அரவிந்தப் பாவையாளென்கிற தம் குமாரத்தியை விவாஹம் பண்ணிவைக்க, நாதமுநிகளும் க்ருதோத்வாஹராய் வீரநாராயணபுரத் தெம்பெருமானை மன்னனாரைத் திருவடிதொழுது, அவர் குணங்களிலீடுபட்டு, பகவத்த்யாநம் பண்ணிக்கொண்டு யோகநிஷ்டராயிருக்க, அவருக்கு ஒரு குமாரர் அவதரிக்க, அவருக்கு ஈஶ்வரமுநியென்று திருநாமம் சாத்தி, அத்யயநாதிகளையும் யோகாப்யாஸத்தையும் பண்ணிவைத்துத் தாமும் யோகநிஷ்டராயெழுந்தருளியிருந்தார்.

பின்பு ஒருகால் நாதமுநிகளும் ஸகுடும்பமாய் மன்னனார் திருமுன்பே வந்து ஸேவித்து, ஆஶ்ரிதஸம்ரக்ஷணார்த்தமாகத் தேவரீர் உகந்தருளின திருமதுரை முதலான திவ்யதேஶங்களிற் சென்று, அங்குள்ள எம்பெருமான்களைத் திருவடிதொழுது வரும்படி நியமித்தருளவேணும் என்று விண்ணப்பஞ்செய்ய, மன்னனாரும் அப்படியே அர்ச்சகமுகேந விடைகொடுத்தருள, அவர்களும் ஸகுடும்பமாய்ப் புறப்பட்டு, "வடதிசை மதுரை சாளக்கிராமம் வைகுந்தந் துவரை யயோத்தி" என்று சொல்லுகிற திவ்யதேஶங்களிற் சென்று, அங்கங்குள்ள தீர்த்தங்களிலே நீராடி, எம்பெருமான்களையும் பணிந்து, தூயபெருநீர் யமுனைக்கரையிலே கோவர்த்தநபுரம் என்கிற க்ராமத்தில் யமுனைத்துறைவர் என்கிற எம்பெருமான் திருவடி தொழுது, அத்யந்தம் ஹ்ருஷ்டராய், அவ்விடத்திலேயே நித்யவாஸம்பண்ணிக்கொண்டு, நாடாத மலர்நாடி நாடோறும்நாரணன்றன் வாடாத மலரடிக் கீழ் வைத்து ஸர்வவிதகைங்கர்யமும் பண்ணிக்

---

1. எல்லாவிதமான



அவதார ஸ்தலமான காட்டு மன்னார் கோவிலில் ஸேவைதரும்

ஸ்ரீமந் நாதமுனிகள்

தர்ஶந ப்ரவர்த்தக பரம்பரையில் ப்ரதமாசார்யராகப்
போற்றப்படுபவர்.

கொண்டு ஸகுடும்பமாக "நாயோத்யாயை ந ராஜ்யாய ஸ்ப்ருஹயேத்ய கதாசந" என்று பெருமா ளவ்விடத்தை ஸந்தோஷித்தாப்போலே ஸந்தோஷித்து எழுந்தருளியிருக்க,

அப்போது மன்னனாரும் 'நம்முடைய வீரநாராயணபுரம் வந்து காணாய்' என்று நாதமுனிகளுக்கு ஸ்வப்நத்தில் அருளிச் செய்ய, அவ் வர்த்தத்தை யமுனைத்துறைவர் முன்னே சென்று நாதமுனிகள் விண்ணப்பஞ் செய்ய, அவரும் அர்ச்சகமுகேந[1] விடை கொடுத்துத் தீர்த்தப்ரஸாதமும் ப்ரஸாதித்தருள, நாதமுநிகளும் ஸகுடும்பமாக [2]வாராணஸீ வழியாய்ப் புருஷோத்தமத்தேற எழுந்தருளி, ஸ்ரீ ஜகந்நாதனையும் திருவடி தொழுது, ஸிம்ஹாத்ரியில் அப்பனையும் ஸேவித்து,

"அஹோ வீர்ய மஹோ ஶௌர்யமஹோ பாஹுபராக்ரம: ।
நாரஸிம்ஹம்ஹம் வந்தே அஹோபில மஹோபலம் ॥"

என்று சொல்லப்பட்ட அழகியசிங்கரையும், "பரன்சென்று சேர் திருவேங்கடமாமலை" என்கிற திருமலையாழ்வாரையும் ஸேவித்து, ஸ்வாமிபுஷ்கரிணியில் நீராடி, வேங்கடமாமலை மேய அப்பனையும் திருவடி தொழுது, கடிகாசலத்தில் அக்காரக்கனி அழகிய சிங்கரையும் ஸேவித்து,

"நகரீணாஞ்ச ஸர்வாஸாம் புரீ காஞ்சீ விஶிஷ்யதே ।
கிரீணாஞ்சாபி ஸர்வேஷாம் ஶ்ரேஷ்டோ ஹஸ்திகிரிஸ் ஸ்ம்ருத: ॥"

என்கிறபடியே உத்க்ருஷ்டமான கச்சிப் பெருநகரில் பிணியொழித் தமரர் பெருவிசும்பருளும் பேரருளாளனையும் ஸேவித்து, திருவஹீந்திரபுரத்திலும் தெய்வநாயகனைத் தொழுது, திருக்கோவலூரில் ஆழ்வார்கள் நயினாரையும் ஸேவித்து, சிறப்புடைய மறையவர்வாழ் திருவரங்கத்தில் யாவரும் வந்தடிபணியு மரங்கநகர் துயின்ற பெரிய பெருமாளையும் ஸேவித்து, தண்குடந்தைக் கிடந்த மாலை நெடியானையும் ஸேவித்து, [3]அங்குநின்றும் மீண்டு வீரநாராயணபுரத்தி லெழுந்தருளி மன்னனாரையும் தண்டன் ஸமர்ப்பித்து நிற்க, மன்னனாரும்,

"விதேஶாதாகதம் புத்ரம் ஸமீக்ஷ்ய ஜநநீ யதா"

1. அர்ச்சகர்வாயிலாக 2. காசி 3. அங்கிருந்து.

என்கிறபடியே குளிரக் கடாக்ஷித்தருள, அங்குள்ளவர்களும் இந் நாதமுநிகளுக்கு பகவத் பக்தி மேலிட்டு இருப்பதையும், மன்னனு ருக்கு இவரிடத்தில் உகப்பு மேலிட்டிருப்பதையும் கண்டு, இவரைக் கொண்டு மன்னனார் கடாக்ஷம் பெற வேணுமென்று இந்நாதமுநி களை ஆராதித்துக் கொண்டிருக்க, இந்நாதமுநிகளும் மன்னனாருக் குத் திருமாலை முதலான கைங்கர்யங்களையும் செய்து கொண்டு ஶாஸ்த்ரங்களையும் ப்ரவர்த்திப்பித்துக் கொண்டிருக்க,

அப்போது சில திருநகரி ஸ்ரீவைஷ்ணவர்கள் எழுந்தருளி மன்ன னாரை ஸேவித்து, "ஆராவமுதே" என்கிற திருவாய்மொழியை அநுஸந்தித்துக் குணாநுபவம் பண்ண, அதைக் கண்டு நாதமுநி களும் 'யோகத்தாலே கண்ணனை அநுபவிக்குமதைக் காட்டிலும், இத் திருவாய் மொழியாலே குணாநுபவம் பண்ணுகிற இது இனியதா யிருந்தது' என்று மகிழ்ந்தருளி, அவர்களைத் தண்டன் ஸமர்ப்பித்து, அந்தத் திருவாய்மொழியை க்ரஹித்துத் தாமும் குணாநுபவம் பண்ணி, இது ஆயிரம் பாட்டுடையதாய் இது பத்துப் பாட்டாய் இதிலும் கண்ணனவதாரத்தைக் கணிசித்துத் திருக்குடந்தை எம் பெருமான் விஷயமாய்க் குருகூர்ச்சடகோபனருளிச் செய்ததாகை யாலே இவ்வாயிரத்தையும் ப்ரஸாதிக்க வேணும் என்று அவர்களைக் கேட்க, அவர்களும் "எங்களுக்குத் திருநகரி ஜந்மபூமியாகிலும், சிரகாலமாய்த் திவ்யதேஶயாத்ரை செய்து கொண்டு திருக்குடந்தை ஏற வந்து, ஆராவமுதனைத் தண்டன் ஸமர்ப்பித்து நிற்கும் போது, வாழ்தொல் புகழாரான அங்குள்ளவர்கள், 'ஆராவமுதே' என்கிற இத் திருவாய்மொழியை அநுஸந்திக்கக் கேட்டு, அவர்களிடத்தில் பணிந்து, இப் பத்துப் பாட்டுக்களையும் [1]அப்யஸித்தோம், மற்றதறி யோம்" என்ன, அவர்களுக்குத் தீர்த்த ப்ரஸாதம் ப்ரஸாதிப்பித்து [2]ஸத்கரித்து மன்னனார் நியமநங்கொண்டு சூழ்புனல் குடந்தையைத் தொழுது, "ஆராவமுதே" என்கிற திருவாய்மொழியாலே அமுதன் திருவடி தொழுது, அங்குள்ள பெரியோர்களையும் திருவாய்மொழி ஆயிரம் ப்ரஸாதிக்க வேணுமென்று ப்ரார்த்திக்க, அவர்களும் "இப் பத்துப் பாட்டுக்களையே அறிவோம்; மற்றதறியோம்" என்றவாறே நாதமுநிகளும் திருநகரியேற எழுந்தருளி, ஆழ்வாரையும் பொலிந்து நின்ற பிரானையும் திருவடி தொழுது, அங்குள்ள பெரியோர்களையும்

1. கற்றோம். 2. மரியாதை செய்து.

ஸேவித்துத் "திருவாய்மொழி ஆயிரமும் ப்ரஸாதிக்க வேணும்" என்ன, அங்குள்ளாரில் பராங்குசதாஸரென்கிறவர் "இவ்விடத்தில் திருவாய்மொழியென்று கேட்டதத்தனை போக்கி,[1] லுப்தமாகையாலே அப்யஸித்தறியோம். ஆகிலும் ஆழ்வார் விஷயமான கண்ணிநுண் சிறுத்தாம்பு எங்களுக்கு [2] ஸம்ப்ரதாயாகதமாகையாலே இத்தை அப்யஸித்துப் பன்னீராயிரம் ஆவ்ருத்தி செய்தீராகில் ஆழ்வாரை ப்ரத்யக்ஷீகரிக்கலாம்" என்றருளிச் செய்ய,

நாதமுநிகளும் அப்ப்ரபந்தத்தை அப்யஸித்துத் திருப்புளியாழ்வாரடியிலே பன்னீராயிரம் ஆவ்ருத்தி அநுஸந்திக்க, அப்போது "ஸகாலஸ் ஸௌம்ய ஸம்ப்ராப்த:" என்கிறபடியே 'இதொரு நன்னாள் கட்பட்டது' என்று எம்பெருமானும் பிராட்டியும் ஆழ்வாரை நியமிக்க, ஆழ்வாரும் மதுரகவிகளோடே இந் நாதமுநிகள் யோகத்திலெழுந்தருளி 'என்ன வேண்டுவது?' என்று கேட்க, நாதமுநிகளும் 'திருவாய்மொழி முதலாக விசேஷார்த்தங்களை ப்ரஸாதிக்க வேணும்' என்று ப்ரார்த்திக்க, ஆழ்வாரும் திவ்ய தம்பதிகளுடைய நியமநப்படிக்கு, இவருக்கு, "திவ்யந்ததாமி தே சக்ஷு:" என்கிறபடியே திவ்ய சக்ஷுஸ்ஸையும் ப்ரஸாதித்துத் திருமந்த்ரத்தையும் திருமந்த்ரார்த்தமான வ்யாஸ ஸூத்ர [3] தத்-அர்த்தங்களையும் வாய்மொழி முதலான நாலாயிர ப்ரபந்தங்களையும் மற்றுமுள்ள ரஹஸ்ய தத்-அர்த்தங்களையும் உபதேசித்தருள, இந் நாதமுநிகளும் அவைகளைப் பெற்று க்ருதார்த்தராய் ஆழ்வாரையும் பொலிந்து நின்றபிரான் முதலான எம்பெருமான்களையும் ஸேவித்து ப்ரபந்தாநுஸந்தாநம் பண்ணிக் கொண்டிருக்க, அங்குள்ள பெரியோர்கள் இந் நாதமுநிகளைத் தண்டன் ஸமர்ப்பித்து, 'தேவரீர் பக்த்யதிசயத்தாலே ஆழ்வார் ப்ரஸந்நராய்த் திருமந்த்ரத்தையும் திருமந்த்ரார்த்தமான வ்யாஸ ஸூத்ர திவ்ய ப்ரபந்தங்களையும் மற்றுமுள்ள விசேஷார்த்தங்களையும் ப்ரஸாதித்தருளினபடி ஆஸ்சர்யம் அன்றோ?' என்று போர உகந்து ஒரு கதையை அருளிச் செய்தார்கள். அதெங்ஙனேயென்னில்:—

"முன்பு திருமங்கையாழ்வார் பெரிய பெருமாளை ப்ரார்த்தித்து இந்த ஆழ்வாரைத் திருவரங்கத் திருப்பதியில் எழுந்தருளப் பண்ணுவித்து, மார்கழி சுக்ல ஏகாதசி முதலாகப் பத்து நாளில் வேத

1. மறைந்துபோனமையால் 2. பரம்பரையாக வந்தது 3. அதன்அர்த்தங்களையும்.

பாராயணத்தோடு திருவாய்மொழியை அநுஸந்திப்பித்து, அதற்குத் திருவத்யயநோத்ஸவமென்று திருநாமம் சாத்தி, இப்படிக்கு ப்ரதிஸம்வத்ஸரம் நடந்து வரும்படி பெரியபெருமாள் நியமநம் பெற்றுப் பண்ணுவித்தருளினாரென்றும், பின்பு சில நாள் கழிந்தவாறே காலவைஷம்யத்தாலே ஆழ்வார் கோயிலுக்கெழுந்தருளாமலும், திவ்ய ப்ரபந்தங்களும் [1]லுப்தங்களாய்விட்டதென்றும் பெரியோர்கள் சொல்லக் கேட்டிருந்தோம் காண்'' என்றருளிச் செய்ய, நாதமுநிகளும் அவர்களைத் தண்டன் சமர்ப்பித்து, யானாய்த் தன்னைத் தான் பாடி' என்கிறபடியே 'அடியேனைக் கொண்டு ஒரு குறை தீர்த்தான்; மற்றொன்றையும் தீர்க்கக் கடவன்' என்று ப்ரார்த்தித்துக் கோயிலேற எழுந்தருளி, அழகிய மணவாளனுக்குத் திருமங்கையாழ்வார் நியமநப்படிக்குத் திருநகரிக்குத் திருமுகப்பட்டயம் போய் ஆழ்வாரை எழுந்தருளப் பண்ணுவித்து, உபாங்கங்களான இரண்டாயிரங்களை ப்ரதமை முதல் பத்து நாளிலும், திருவாய்மொழியை ஏகாதசி முதல் பத்து நாளிலும், மற்றொராயிரத்தைப் பின்பு ஒரு நாளிலும் அநுஸந்திப்பித்து, ஆக இருபத்தொரு நாளில் திருவத்யயநோத்ஸவத்தை நடப்பித்துத் திருக்குடந்தைஏற எழுந்தருளி, ஆராவமுதனையும் தண்டன் ஸமர்ப்பித்து, ஒரு நம்மாழ்வாரைத் திருப்ரதிஷ்டை செய்து, மார்கழி மாஸம் முதலிருபத்தொரு நாளளவிலே ஸங்க்ரமோத்ஸவத்திற்கு விரோதமன்றிக்கே திருவத்யயநோத்ஸவத்தை நடப்பித்து, ஆராவமுதாழ்வானென்று திருநாமம் சாத்தி, இப் ப்ரபந்தங்களை நிலை நிறுத்தினவராகையாலே இஸ் ஸித்தாந்த ப்ரவர்த்தகர் ஆராவமுதாழ்வானே என்று போர உகந்து பணிந்து நிற்க,

''ஏஷ ஸர்வஸ்வபூதோ மே பரிஷ்வங்கோ ஹநூமத:''

என்கிறபடி ஆராவமுதாழ்வானும் குளிரக் கடாக்ஷித்தருள, நாதமுநிகளும் விடைகொண்டு, வீரநாராயணபுரத்தேற வெழுந்தளி மன்னனாரையும் ஸேவித்து, ''நங்கண்ணன் கண்ணல்லதில்லையோர் கண்ணே என்கிறபடியே தேவரீர் நியமநத்தாலே இவ்வளவு ஸித்தாந்தோத்தாரணம் உண்டாய்த்து'' என்று விண்ணப்பஞ்செய்து, பின்னையும் சில ஸ்ரீவைஷ்ணவ தர்மங்களையும் நியமித்தருளி நிற்க, மன்னனாரும் குளிரக் கடாக்ஷித்தருளி, ''அத்ரைவ ஸ்ரீரங்கே


1. மறைந்து விட்டன.

ஸுகமாஸ்வ'' என்னும்படி அர்ச்சக முகேந திருவாய் மலர்ந்தருளி, திருமாலை முதலான வரிசைகளையும் ப்ரஸாதிக்க, இவரும் பகவந் நியமநத்தைச் சிரஸாவஹித்துக் கீழையகத்தாழ்வான், மேலையகத்தாழ்வான் முதலானவர்களுக்குத் திவ்ய ப்ரபந்தங்களைத் தேவகாநத்தோடே ஶிக்ஷிப்பித்துச் சிலரைக் கோயிலிலே பெரியபெருமாளுக்குப் பாடும்படி நியமித்தருளி, சிலரைக் கொண்டு மன்னனாருக்குப் பாடுவித்தும், இப்படி வ்யாஸ பகவான் வேதங்களை உதாத்தாநுதாத்த ஸ்வரித ப்ரசயங்களோடே ஶிக்ஷித்து வைத்தாப்போலே இத்திவ்ய ப்ரபந்தங்களையும் திவ்யகாநத்திலே அடைத்து இயலுமிசையுமாக்கிப் பாடுவித்தருள இது லோகத்தில் ப்ரஸித்தமாயிற்று.

பின்பு ஒருநாள் அப்படி ப்ரஸித்தமான தேவகாநத்தை அப்யஸித்த ஒரு தாஸியும், மநுஷ்யகாநத்திலே ஸமர்த்தையான ஒரு தாஸியும் கங்கைகொண்ட சோழபுரத்தில் அந்தத்தேஶாதிபதியான சோழன்பக்கல் காநம்பண்ண, அவனும்கேட்டு, மநுஷ்யகாநஸமர்த்தையான தாஸிக்கு த்யாகம் கொடுத்துத் தேவகாநஸமர்த்தையான தாஸியை அநாதரிக்க, அவளும் பக்திமேலிட்டுத் திவ்யதேஶங்கள் தோறும்பாடிக்கொண்டுவந்து மன்னனார் முன்பே ஸேவித்துப் பாட, அத்தைக்கேட்ட நாதமுநிகளும் அவளைக்கொண்டாடி மாலை தீர்த்தம் ப்ரஸாதிப்பிக்க, அவளும் ராஜாவிடத்தில் ''தேவகாநத்தில் ஸமர்த்தரான நாதமுநிகளை அழைத்து, நம்மைத் தேவகாநம் பண்ணச் சொல்லி அதன்வாசி யறிவாய்காண்'' என்று சொல்ல, ராஜாவும் நாதமுநிகளை அழைத்துவரவிட, அவரும் தமக்குத் திருவுள்ளமில்லாவிடிலும் சில [1]ஸம்ருத்த்யர்த்தமாக அங்குள்ளாராலே ப்ரார்த்திக்கப்பட்டு அவ்விடத்தெழுந்தருள, ராஜாவும் எதிர்கொண்டுவந்து மர்யாதைபண்ணி 'இவள்பாடுகிற தேவகாந விஶேஷம் என்?' என்ன, நாதமுநிகளும் அவ்விடத்தில் [2]தேவதாதிஷ்டிதமான ஒரு [3]ஶிலாஸ்தம்பவிஶேஷத்தில் ஒரு தாளத்தைவைத்துத் தேவகாநம் பண்ணச்சொல்ல, அந்தஸ்தம்பமுருகிவர தேவகாநம் விட்டவாறே அத்தாளத்தை யெடுக்கச் சொல்லி அத்தையெடுக்க [4]ஒண்ணாமையைக் காட்டி, பின்னையும்பாடி எடுத்துக்கொள்ளவிட, பின்பும் ஏககாலத்தில் நாநூறுதாளத்தை தட்டச்சொல்ல, அந்த ஶப்தத்தைக்கேட்டு,

1. நிறைவுகளுக்காக 2. தேவதை அமர்ந்த 3. ஒரு குறிப்பிட்ட கற்கம்பத்தில் 4. முடியாமை,

'இத்தாளம் இவ்வளவு [1]பரிமாண முடையது' என்று அருளிச்செய்ய ராஜாவுஞ் ஸோதித்து [2]அந்யூநாதிகமாயிருக்கையாலே நாதமுநிகள் திருவடிகளிலே தண்டனிட்டு அநேக ஸந்மாநங்களைப் பண்ண நினைக்க, நாதமுநிகள் [3]நிஸ்ஸ்ப்ருஹராகையாலே அவைகளைத் தவிர்ந்து ராஜாவை ஆஸீர்வதித்து மன்னனூர்பக்கல் எழுந்தருளினார். ராஜாவும் அந்தத் தாஸிக்கு மர்யாதைபண்ணி நாதமுநி [4]ப்ரப்ருதிகளிடத்திலே [5]ப்ரதிபத்திபண்ணிப் போந்தான்.



திருக்குடந்தை திவ்ய தேசத்தில் ஸேவை தரும்
ஸ்ரீ ஆராவமுதாழ்வான் தம்பதிகள்

1. அளவு 2. குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இல்லாமல், 3. பற்றில்லாதவர், 4. முதலியவர்கள், 5. பக்தி.

# உய்யக்கொண்டார் வைபவம்

பின்பு,

"ஶரீரம் வஸுவிஜ்ஞாநம் வாஸ: கர்மகுணநஸூந் |
குர்வர்த்தந்தாரயேத்யஸ்து ஸ ஶிஷ்யோ நேதரஸ்ஸ்ம்ருத: ||"

என்று சொல்லுகிற ஶிஷ்யகுண [1]பூர்த்திஉடையரான புண்டரீகாக்ஷர் இந்நாதமுநிகள் திருவடிகளிலே ஆஶ்ரயிக்க, பின்னையும் குருகைகாவலப்பன் நம்பி, கருணாகரதாஸர், ஏறுதிருவுடையார், திருக்கண்ணமங்கையாண்டான், வானமாதேவியாண்டான், உறுப்பட்டூரார்ச்சான்பிள்ளை, ஶோகத்தூராழ்வான் ஆக இவ்வெழுவர்களும் வந்து ஆஶ்ரயிக்க, நாதமுநிகளும் அந்த எண்மர்களுக்கும் மந்த்ரோபதேஶாதிபுரஸ்ஸரமாகத் திவ்யப்ரபந்தங்களையும் ஸமஸ்தவிஶேஷார்த்தங்களையும் ப்ரஸாதித்தருளி, ந்யாயதத்வமென்கிற ஶாஸ்த்ரத்தையும் யோகரஹஸ்யத்தையும் அருளிச்செய்து, அநுஷ்டிதப்ரபதநராகையாலே பலரூப யோகத்திலே எழுந்தருளியிருந்தார்.

பின்பு ஒருகால் இவருடைய யோக வைபவத்தைக்கேட்டு ராஜாவும், தானும்ஸ்த்ரீகளுமாகவந்து மன்னனாரையும் நாதமுநிகளையும் ஸேவித்துப்போக, அப்போது "திருவுடைமன்னரைக்காணில் திருமாலைக்கண்டேனே யென்னும்" என்கிறபடியே நாதமுநிகளும் அவர்களை க்ருஷ்ணனும் கோபிமார்களுமாக நினைத்துப் பின்தொடர்ந்துபோக, குருகைகாவலப்பனுள்ளிட்டார் நாதமுநிகளைத் திருவடிதொழுது,

"தத்தாகிலாதிகாரத்வாத் ப்ரஹ்மஜ்ஞாநாக்நிநா முநி: |
வர்த்தமாநஶ் ஶ்ருதேர் மூர்த்நி நைவ ஸ்யாத்வேதகிங்கர: ||"

என்று சொல்லுகிறபடி பகவத் கைங்கர்யங்களையும் பாகவதகைங்கர்யங்களையும் விட்டிருக்கும் அவர்கள்படியோ? தேவரீருக்கென்று விண்ணப்பஞ்செய்ய, அத்தைக்கேட்டு ஒக்குமொக்கும்கைங்கர்யபரர்களான நமக்குத் தகாதென்று அருளிச்செய்து மீள எழுந்தருளி வேதாந்தப்ரவசநம் பண்ணிக்கொண்டிருக்க, அப்போது வங்கிப்புரத்தாச்சியும் தம் குமாரத்தியாரான அரவிந்தப்பாவையாள் என்கிற நாதமுநிகள் தேவியாரைப் பார்க்கவேணுமென்று அழைத்துக்

1. நிறைவு



அவதார ஸ்தலமான திருவெள்ளறையில் ஸேவைதரும்

**ஸ்ரீ உய்யக்கொண்டார்**

ஸ்ரீமந்நாதமுனிகளின் விசேஷாநுக்ரஹத்துக்குப் பாத்திரர்

கொண்டுவரும்படி ஒருவரை அனுப்பிவைக்க, அவரும் நாதமுநிகள் திருவடிதொழுது அவ்வர்த்தத்தை விண்ணப்பஞ்செய்ய, நாதமுநிகளும் அப்படியே திருவுள்ளம்பற்றி ஆத்மகுணபூர்ணரான புண்டரீகாக்ஷரையும் கூட அனுப்புவிக்க, அவரும் ஆச்சி திருமாளிகையில் கொண்டுபோய் விட்டு விடைகேட்க, ஆச்சியும் தீர்த்தப்ரஸாதம் ஸ்வீகரித்துப் போமென்று விடைகொடுக்க, அங்குள்ளாரில் சில முக்குறும்பர் இவர் [1]புரஸ்ஸிகரென்று திருமுற்றத்தில், முன்னாள் தண்ணீரில் சேர்த்த ப்ரஸாதத்தை ஸ்வீகரிக்கும்படி செய்விக்க, அவரும் அத்தை ஸ்வீகரித்துத் தன்னை [2]க்ருதார்த்தராக எண்ணி விடைகொண்டு நாதமுநிகள் ஸந்நிதியில் வந்து தண்டன் ஸமர்ப்பிக்க, நாதமுநிகளும் இவருடைய ஸந்தோஷாதிசயத்தை [3]முகவிகாஸாதிகளாலே கண்டு, இது என்ன? என்று யோகத்தாலே கடாக்ஷித்தருளி, அவை எல்லாம் திருவுள்ளத்தில்கொண்டு [4]போர உகந்து, "உமக்கு மர்யாதை நடந்தது என்?" என்று கேட்டருள, அவரும் அடியேன் பெற்றபேறு "ஞாலத்தில் புத்திரனைப்பெற்றார் நங்கைமீர் நானே மற்றாருமில்லை" என்கிறபடியே "[5]ஸர்வோத்க்ருஷ்டமானது அன்றோ?" என்று விண்ணப்பஞ்செய்ய, நாதமுநிகளும், அது எங்ஙனே என்ன? "போனகஞ் செய்த சேடந்தருவரேல் புனிதமன்றே?" என்றும் "ததுச்சிஷ்டம்பாவநம்" என்றும் சொல்லப்பட்ட கலக்கமில்லாத் தண்ணீரில் வைத்த நல்லதோர் சோற்றை ஆச்சிநியமநத்தாலே அடியேன் ஸ்வீகரிக்கும்படி பெற்ற [6]பேறென்ன, நாதமுநிகளும் போர உகந்து, "நம்மை உய்யக்கொண்டீர்" என்று [7]ஆலிங்கனம் பண்ணிக்கொண்டு "உமக்குத் தகுந்த [8]பாரிதோஷிகமில்லை" என்று தந்திருவடிகளிரண்டையும் அவர் முடியிலமர்த்தியருள, அவரும் "கோலமாமென் சென்னிக்குன் கமலமன்ன குரைகழலே" என்று ஆழ்வார் ப்ரார்த்தித்தார், அடியேன் பெற்றேன் என்று ஸந்துஷ்டராக, அங்குள்ளார்களும் "இதென்ன ஆஸ்சர்யம்! இந்நாதமுநிகளுக்குப் பெருமாள்படியும் இப்புண்டரீகாக்ஷருக்குப் பிராட்டிபடியும் ஒத்திருந்ததே!" என்று உள்மகிழ்ந்து நாதமுநிகளைத் தண்டன் ஸமர்ப்பித்து, "இவருக்கு உய்யக்கொண்டாரென்று திருநாமம் ப்ரஸாதித்தால், இவ்வாத்ம

---

1. சோழியர் 2. பிறவிப்பயன் பெற்றவராக 3. முகமலர்ச்சி 4. மிகவும் ஸந்தோஷித்து 5. எல்லாவற்றிலும் சிறந்தது 6. பாக்கியம் 7. தழுவுதல் 8. பரிசு

குணத்தைப் பின்னோர்களும் கண்டு [1]உஜ்ஜீவிப்பர்கள்" என்று ப்ரார்த்திக்க, அப்படியே நாதமுநிகளும் ப்ரஸாதித்தருளினார்.

அப்போது சிலர் ஶாஸ்த்ரார்த்தத்தைத் தெரிவிக்கைக்காக "யாதயாமங்கதரஸம்"என்றும் "நச பர்யுஷிதம் போஜ்யம்" என்றும் நிஷித்தமாகச் சொல்லப்பட்ட ப்ரஸாதத்தை ஸ்வீகரித்தும் இப்படி கொண்டாடும்படி யாவதே! என்று கேட்க, நாதமுநிகளும் "ஆபஸ்தம்ப தர்மாதிகளை அறியாதார் சோத்தியம் [2]ஆஜாநஶுத்தமான நம்மாசாரத்தில் தட்டாது" என்றருளிச்செய்தார். இவ்வர்த்தங்களையெல்லாம் வங்கிப்புரத்தாச்சியும் கேட்டு, "திருவிலேனொன்றும் பெற்றிலேன்" என்று தம்மையும் தம் [3]பரிஜநங்களையும் நொந்து, நாதமுநிகளையும் அங்குள்ளவர்களையும் போர உகந்து,

"தர்மேண ப்ரஹ்மவித் பாதி தஶபூர்வாந் தஶாவராந் |
கந்யா ப்ரஹ்மவிதே தத்தா ஷதபூர்வாந் ஷதாவராந் ||"

என்கிறபடியே நந்திருமகளார் ஸம்பந்தத்தாலும் "உகக்கு நல்லவரோடு முழிதந்து" என்கிற பாட்டின்படியே அதுவும் நம்முடைய ஸம்ருத்தியாகையாலும், "எம்மாபாவியேற்கும் விதிவாய்க்கின்று வாய்க்குங்கண்டீர்" என்னும்படி நமக்கு உய்யும்வகை உண்டென்றும், ஸந்துஷ்டராய்ப் புண்டரீகாக்ஷரிடத்தேறச் சென்று "யதி கிஞ்சித திக்ராந்தம்" என்று க்ஷாமணம் பண்ணிக்கொண்டு அரவிந்தப் பாவையாரையும் நாதமுநிகளோடே சேர்த்துக் கண்டு மகிழ்ந்து க்ருதார்த்தரா யெழுந்தருளினர்.

பின்னர் ஒருகால் நாதமுநிகள் குருகைகாவலப்பனுக்கு யோக ரஹஸ்யக்ரமத்தை உபதேசித்து அநுஷ்டிப்பித்தருளினர். உய்யக் கொண்டாருள்ளிட்டாருக்குத் திருவாய்மொழி முதலான வேதாந்த [4]ப்ரவசநம் பண்ணும்படி நியமித்தருளினர்.

பின்பு உய்யக்கொண்டாரும் தர்ஶநார்த்தங்களை ப்ரவசநம் பண்ணிக்கொண்டிருக்கிற காலத்திலே, இவர் திருவடிகளிலே மணக்கால் நம்பி, திருவல்லிக்கேணிப் பாண்பெருமாளரையர், சேட்டலூர் செண்டலங்காரதாஸர், புண்டரீகாக்ஷதாஸர், கோமடத்துத் திருவிண்ணகரப்பன், உலகப்பெருமாள் நங்கை இவர்கள் ஆஶ்ரயித்தார்கள். இவர்களில் :—

1. கடைத்தேறுவார்கள் 2. பிறவிமுதல் சுத்தமான. 3. பணியாளர்கள் 4. போதித்தல்.



அவதார ஸ்தலமான மணக்காலில் ஸேவைதரும்

மணக்கால் நம்பி

ஆளவந்தாரை ஐசுவரியத்தைத் துறக்கச்செய்து
வைணவத்திற்கு அளித்த உத்தமர்

# மணக்கால்நம்பி வைபவம்

மணக்கால்நம்பி முன்பே பன்னிரண்டுஸம்வத்ஸரம் ஆசார்ய கைங்கர்யஞ் செய்துகொண்டிருக்க, உய்யக்கொண்டார் தேவிகள் திருநாட்டுக் கெழுந்தருளினார். பின்பு திருமாளிகைக் கைங்கர்யமும் செய்துகொண்டிருக்கும்போது ஒருநாள் ஊர் பெண்பிள்ளைகள் திருக்காவேரியில் குளித்துப் [1]பத்தாந்நம் புஜிக்கப்போக, உய்யக்கொண்டார் பெண்பிள்ளைகளிருவரையும் அழைத்துக்கொண்டுபோய்ப் புஜிப்பித்துவரும்போது பெண்பிள்ளைகள் முன்னே வழிதப்பி வந்து ஒருவாய்க்கால் சேறுயிருக்கக் கண்டு திகைத்து நிற்க, தாமும் அங்கு ஏறவந்து அவர்களைத் தம்முதுகிலே அடியிட்டுப்போகும்படி பண்ணித் தான்குளித்துவருவதற்கு முன்னே உய்யக்கொண்டாரும் இச்செய்தியைக்கேட்டு ப்ரீதராய் இவரும் வந்தடிபணிந்தவாறே தந்திருவடிகளிரண்டையும் அவர் திருமுடியிலமர்த்தியருளி, இது நம்மாசார்யர் நமக்கு ப்ரஸாதித்தருளின பாரிதோஷிகமென்றருளிச் செய்ய, நம்பியும் "உற்றேனுகந்து பணிசெய்து உன்பாதம், பெற்றேன் ஈதே யின்னம் வேண்டுவதெந்தாய்" என்று விண்ணப்பஞ் செய்ய, உய்யக்கொண்டாரும் உகந்தருளினார்.

———

1. கட்டுச்சாதம்

# ஆளவந்தார் வைபவம்

ஆஷாடே சோத்தராஷாடா ஸம்பூதம் தத்ர வை புரே ।
ஸிம்ஹா நநாம்ஸம் விக்யாதம் ஸ்ரீயாமுநமுநிம் பஜே ॥

பின்பு நாதமுநிகளும் தம் குமாரரான ஈஸ்வரமுநிகளுக்குக் கலி யுகத்தில் ௪௦௧௮-ஆவதான தாதுவர்ஷம் ஆடிமாஸம் உத்தராஷாடா நக்ஷத்ரத்தில் ஒரு குமாரரவதரித்தருள, அவருக்கு யமுநைத் துறைவனென்கிற திருநாமம் [1]சாத்துமென்று ஈஸ்வரமுநிகளுக்கும், திருமந்த்ராதி ஸமஸ்த விஸேஷார்த்தங்களையும் [2]ப்ரஸாதியுமென்று உய்யக்கொண்டாருக்கும், யோக ரஹஸ்யத்தை ப்ரஸாதியுமென்று குருகைகாவலப்பனுக்கும் நியமித்தருளி யோகத்திலெழுந்தருளியிருந்தார்.

பின்பு ஈஸ்வரமுநிகளும் அந்தக் குமாரருக்கு ஜாதகர்மத்தையும்பண்ணி யமுநைத்துறைவரென்கிற திருநாமத்தையும் சாத்தினார். பின்பு உய்யக் கொண்டாரும் கோயிலிலே அஸக்தராய் எழுந்தருளியிருக்கும்போது, தமக்கு நாதமுநிகள் நியமித்த கைங்கர்யத்தை மணக்கால் நம்பிக்கு நியமித்தருளி, 'நான் செய்யப் பெற்றிலேனே' என்று நொந்துநிற்க, நம்பியும் அப்படியே 'நாதமுநிகள் திருப்பேரனார்க்கு அடியேனைக் கொண்டு செய்கிற கைங்கர்யம் தேவரீர் செய்கிற கைங்கர்யமன்றோ?' என்று விண்ணப்பஞ்செய்ய உய்யக் கொண்டாரும் உகந்தருளினார்.

பின்பு ஈஸ்வரமுநிகள் அந்தக் குமாரருக்கு [3]அந்நப்பிராசந சௌளங்களைச் செய்து உபநயநஞ்செய்தருளும் போது மணக்கால் நம்பி எழுந்தருளி திருவிலச்சினை ப்ரஸாதித்து திருமந்ரத்தையுமுபதேஸித்தருளினார்.

பின்பு நாதமுநிகளும் "*குருபுத்ர பௌத்ராதிகளும் வித்யா தாநத்திற்கு ப்ரஸஸ்த பாத்ரங்கள்" என்றும், "[4]ஜ்ஞாந ஸந்ததியாலே முற்பட்டவர்களும் குருக்களாக வரணீயர்" என்றுஞ் சொல்லுகிற விஸேஷார்த்தங்களை ப்ரகாஸியாநின்று கொண்டு, யமுநைத் துறைவரையுங் குளிரக்கடாக்ஷித்து மகிழ்ந்தருளினார்.

---

1. அளியும், 2. போதியும் 3. வேதமுறைப்படி அன்னம் ஊட்டுதல் குடுமிவைத்தல் 4. ஜ்ஞாநபரம்பரையாலே.

---

* இவ்விடத்தில் ஸம்ப்ரதாயாந்தரஸ்த்தர்கள் சில க்ரந்தங்களில் ஸ்ரீமந்நாதமுநிகள் முந்நூற்றுமுப்பது திருநக்ஷத்ரம் எழுந்தருளி



அவதார ஸ்தலமான காட்டுமன்னார்கோயிலில் ஸேவைதரும்
ஸ்ரீ ஆளவந்தார்
(ஸ்ரீபாஷ்யத்தின் செந்நிலம், கீதாபாஷ்யத்தின் வித்து.
வைணவத்தின் செல்வம்)
யாமுனாசார்யர், யமுனைத்துறைவர் என்று போற்றப்படுபவர்.